விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீட்டில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்களைப் பற்றி தனியே விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கூறி, 1973–74 ஆம் ஆண்டின் முதல் துணை மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

3. 1968–69 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை குறித்த விவர அறிக்கையினை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைத் தலைவர் அவர்களே, 1968–69 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருக்கிறது. அத்தகைய செலவினங்கள் பற்றிய விவரங்களை இம் மானியக் கோரிக்கையில் காணலாம்.

2. 1971–72 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு, 1968–69 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதை குறிப்பிட்டுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்கு மானியக் கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு பரிவுரை செய்தது. அவ்வண்ணமே, 1968–69 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின்கண் வைக்கப்படுகிறது. மொத்தத்தில், மிகைச் செலவு 5.52 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் சாட்டிய செலவினமாகும். இதுவே 4.53 கோடி ரூபாய் அளவுக்கு பெரிய இனமாக இருக்கிறது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணம் என்ன என்பது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

1968–69 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.